1981 ஏப்ரல் 4] [திரு. செ. அரங்கநாயகம்]

நுழைவுச் சீட்டு கிடைக்கவில்லை என்ற குறைபாடு பிரைவேட் கேன்டிடேட்ஸுக்கு சில இடங்களில் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

கல்வி இலாகாவில் சில விதிமுறைகள் வைத்து இருக்கிறார்கள். அவைகள் பின்பற்றப்பட வேண்டும். அதைப் பின்பற்றத் தவறிவிடுவோமானால் ஒருவருக்குப் பதில் இன்னொருவர் பரிட்சை எழுத நேரிடும். பிறகு அந்தத் தேர்வே அர்த்தமற்றதாகிவிடும். அந்தத் தேர்வுத் துறை இயக்ககத்திற்கு யார்யார் தேர்வு எழுத விண்ணப்பித்து இருந்தார்களோ அவர்களுக்கு எல்லாம் நுழைவுச் சீட்டு அனுப்பப்பட்டுள்ளது. நுழைவுச் சீட்டு பெறாதவர்கள் கூட நேரில் தேர்வு மையங்களுக்குச் சென்று அதற்கான விண்ணப்பத்தையும், உறுதிமொழியையும், கொடுத்தால், தேர்வு எழுதும் வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கான எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கிறது. நுழைவுச்சீட்டு கிடைக்கவில்லை என்று எந்தவிதமான புகாரும் இதுவரையில் வரவில்லை. பள்ளிகளில் படித்து பரிட்சை எழுதுகிற மாணவர்களைப் பொறுத்தவரையில், தலைமையாசிரியர்கள் மூலம் நுழைவுச் சீட்டுகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, இதிலே எந்தவிதமான தவறும் ஏற்படவில்லை. எனவே இந்தப்பிரச்சினை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்புகள்

அ. கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் ஏற்பட்ட தீ விபத்து

திரு. சு. முத்துகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக ஆதிதிராவிடர்களுக்குச் சொந்தமான 113 வீடுகள் சேதமுற்றது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுகா, ஆரல்வாய் மொழி கிராமத்திலுள்ள அழகியநகர் அரிசனக் குடியிருப்பில் 5–3–1981 அன்று தீ விபத்து ஏற்பட்டது. 81 குடியிருப்புகள் முழுவதுமாகச் சேதமடைந்தன. 18 குடியிருப்புகள் பகுதியாகச் சேதம் அடைந்தன. மொத்த சேத மதிப்பு சுமார் ஒரு இலட்சம் ரூபாய். உயிர்சேதமோ, கால்நடை சேதமோ இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு அருகிலுள்ள ஒரு பள்ளியில் தங்க இட வசதி செய்து கொடுக்கப்பட்டது; உணவும் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல; அரிசி, வேட்டி மற்றும் புடவையும் வழங்கப்பட்டது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவரவர்களே, ஆரல்வாய் மொழியில் நடைபெற்ற இந்த தீ விபத்து தற்செயலாக ஏற்பட்டிருக்கிறது. அதிலும் மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப் போல ஏறத்தாழ 99 வீடுகள், குறிப்பாக அரிசனப்பகுதி ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டிக் கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு இதிலே கவனம் கொண்டு, 200 ரூபாய் உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இருந்தாலும் அந்தப் பகுதியிலே அவர்கள் ஏழை மக்கள் என்பதால் தங்கள் உபயோகத்திற்கு குறைந்த அளவு தானியங்களே வைத்திருந்தார்கள். அவர்களுக்கு ஏறத்தாழ 2,000 ரூபாய், 3,000 ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, இந்த 99 வீடுகளுக்கும், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அரசின் சார்பிலே 2,000 ரூபாய் கடன் வழங்க வேண்டுமென்று அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் அரசிடமும் முறையிட்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரை அந்தக் கடன் வழங்கப்படவில்லை. ஆகவே, அரசு உடனடியாக கடன் வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தம்: தலைவரவர்களே, அவர்களுக்கு ஆதிதிராவிடர்கள் என்ற முறையிலே வட்டி இல்லாத கடன் 2,000 ரூபாய் வரையிலே வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே அவர்கள் இந்தக்கடனை வழங்குவதற்காக அதிகாரிகளிடம் முறையிட்டபோது அவர்கள் ஜாமீன் வேண்டுமென்று கேட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஜாமீன் கொடுப்பதற்கு பாதிக்கப்பட்ட அந்த ஏழை எளிய மக்களால் இயலவில்லை. ஆகவே, அவர்களுக்கு அந்த நிபந்தனையைத் தளர்த்தி, கடன் கொடுக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.